**செ.வெ.எண்: 300** **நாள்: 25.05.2021**

**தஞ்சாவூர் ஒன்றியம் வண்ணாரப்பேட்டை, ராமநாதபுரம் ஊராட்சிகளில் கொரோனா தடுப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் ஆய்வு**

தஞ்சாவூர் ஒன்றியம் வண்ணாரப்பேட்டை, ராமநாதபுரம் ஊராட்சிகளில் கொரோனா தடுப்பு பணிகள் குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ம. கோவிந்த ராவ் இ ஆ ப அவர்கள் இன்று (25.05.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தஞ்சாவூர் ஒன்றியம் வண்ணாரப்பேட்டை ஊராட்சியில் 17 நபர்கள் கொரோனா நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் . அவர்களில் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டவர்களை நேரில் பார்வையிட்டு அவர்களுக்கு சுகாதாரத் துறையின் சார்பில் தொடர்ந்து கண்காணிக்க படுகிறார்களா எனவும், ஊராட்சி அலுவலர்கள் தொடர்ந்து அந்த பகுதியில் சுகாதார பணிகளை மேற்கொள்கிறார்கள் எனவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டும், நோயினால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டவர்களிடம் நேரில் கேட்கும் தெரிந்து கொண்டார்.

ஊராட்சிகளில் உள்ள வீடுகளின் எண்ணிக்கையைப் பொருத்து நூறு வீட்டிற்கு ஒரு தன்னார்வலர் வீதம் தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டு. வீட்டில் உள்ளவர்களுக்கு காய்ச்சல், சளி, வேறு ஏதும் அறிகுறிகள் உள்ளதா எனவும் , 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் , வேறு எதுவும் துணை நோயுள்ளவர்கள் அவர்களின் உடல்நிலை குறித்தும் தினமும் வீடு வீடாக சென்று பதிவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. தன்னார்வ களிடமிருந்து பெறப்படும் தகவல்களை கொண்டு உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களை உடனுக்குடன் சுகாதார அலுவலர்கள் பரிசோதனை செய்தும். அவர்களை பரிசோதனை முடிவு வரும்வரை வீட்டில் தனிமைப்படுத்தி கண்காணிக்கவும் அறிவுறுத்தினார். கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டவர்களிடம் ஊராட்சியின் சார்பில் வழங்கப்பட்ட நோட்டீஸ் மற்றும் அதில் உள்ள அலைபேசி எண் ஆகியவை குறித்தும், சுகாதாரத் துறையின் சார்பில் இதுவரை எத்தனை முறை வந்து ஆக்சிஜன் அளவு பரிசோதனை செய்தார்கள் எனவும் கேட்டறிந்தார். மேலும் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டவர்கள் வீட்டிலுள்ள மற்றவர்களிடமிருந்து தனிமைப் படுத்திக் கொள்வதன் மூலம் வீட்டில் உள்ளவர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படாமல் பாதுகாப்பாக இருந்திட அறிவுறுத்தினார்.

தொடர்ந்து ராமநாதபுரம் ஊராட்சி மனோஜிபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் அரசின் அறிவுறுத்தலின்படி முன்னுரிமை அடிப்படையில் 18 வயதிற்கு மேற்பட்ட முன் களப்பணியாளர்கள் மற்றும் மக்களிடம் நேரடியாக தொடர்புடைய காய்கறி மற்றும் மளிகை கடை ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள் , சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் ,பெட்ரோல் பங்க் ஊழியர்கள், காலையில் வீடுகளில் செய்தித்தாள் போடும் பணியாளர்கள், டாக்ஸி ஓட்டுனர்கள், பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு. இதுவரை தடுப்பூசி போட்ட கொண்டவர்களின் விவரம் குறித்து கேட்டறிந்து, பதிவேற்றினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆட்டோ

ஒலிபெருக்கி மூலமாக அறிவுறுத்தும் அறிவுறுத்தினார். பின்னர் ஏ.எஸ்.எம் காலனியில் வீட்டில் தனிமைப்படுத்திக் கொண்டவர்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது ஊரக வளர்ச்சி திட்ட முகமை திட்ட இயக்குனர் திரு. பழனி, தஞ்சாவூர் கோட்டாட்சியர் திருமதி. வேலுமணி, சுகாதாரத்துறை துணை இயக்குனர் மரு. நமசிவாயம், உள்ளாட்சி பிரதிநிதிகள், உள்ளாட்சி அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**